 Reg. No. : ..............................

**Code No. : 10365** **Sub. Code : AMTA 62**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2023

Sixth Semester

Tamil — Core

காப்பிய இலக்கியம்

(For those who joined in July 2020 only)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

1. சிலப்பதிகாரத்தின் பகுப்பு முறை எத்தனை?

(அ) மூன்று காண்டங்கள்

(ஆ) பத்து காதைகள்

(இ) இரண்டு காதைகள்

(ஈ) ஐந்து காண்டங்கள்

2. "கோவலனின் கொலைக்குக் காரணம்" பொருத்தமானது எது?

(அ) பொற்கொல்லனின் சதி

(ஆ) மாதவியின் சாபம்

(இ) கோவலனின் அலட்சியம்

(ஈ) ஊழ்வினை

3. மணிமேகலை காப்பியத்தின் ஆசிரியர் யார்?

(அ) இளங்கோவடிகள் (ஆ) கம்பர்

(இ) சீத்தலை சாத்தனார் (ஈ) திருத்தக்கதேவர்

4. குண்டலகேசியின் ஆசிரியர் யார்?

(அ) நாதகுத்தனார் (ஆ) உ.வே.சா.

(இ) சீத்தலை சாத்தனார் (ஈ) திருத்தக்கதேவர்

5. காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப் பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து ________ பழங்கள் சிந்தும் நாடு எது?

(அ) மதுரை

(ஆ) ஏமாந்தகம்

(இ) காவிரிப்பூம் பட்டினம்

(ஈ) எதுவுமில்லை



6. சமண சமயத்தில் இன்பச்சுவை நிரம்பிய காப்பியம் இல்லையென்ற குறையைப் போக்க எழுந்த நூல் எது?

(அ) சீவகசிந்தாமணி (ஆ) மணிமேகலை

(இ) சிலப்பதிகாரம் (ஈ) குண்டலகேசி

7. கம்பரின் பிற நூல்களுள் ஒன்று

(அ) ஏரெழுபது (ஆ) குண்டலகேசி

(இ) நளவெண்பா (ஈ) வில்லிபாரதம்

8. சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் யார்?

(அ) திருநீலநக்க நாயனார்

(ஆ) திருத்தக்கதேவர்

(இ) அயவந்தி

(ஈ) நாயனார்

9. சீறாப்புராணத்தின் காண்டப்பிரிவுகள் எத்தனை?

(அ) மூன்று (ஆ) ஐந்து

(இ) இரண்டு (ஈ) எட்டு

10. தேம்பாவணி நூலின் ஆசிரியர் யார்?

(அ) கிருஸ்ணப்பிள்ளை (ஆ) வீரமாமுனிவர்

(இ) வேதநாயகம் (ஈ) கால்டுவெல்



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) வழக்குரை காதையில் இடம் பெறும் அரசியின் தீக்கனவு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வாயிலோயே வாயிலோயே...என்று கூறும் கண்ணகியின் கூற்றினை விவரி.

12. (அ) காயசண்டிகை, "சாதுவனின் தீயொழுக்கம்"குறித்து கூறுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) நாகர்களுக்கு 'சாதுவன் உரைத்த அறநெறி' குறித்து காயசண்டிகை கூறியவற்றைத் தொகுத்துரைக்க.

13. (அ) நாமக்கள் இலம்பகத்தில் இடம்பெறும் நகர் வளம் குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) நாமகள் இலம்பகம் கூறும் கோயில் சிறப்புகளை ஆராய்க.



[P.T.O.]

14. (அ) கிட்கிந்தா காண்டத்தின் கதைச் சுருக்கத்தினைத் தொகுதிரைக்க.

(அல்லது)

(ஆ) அனுமன் படலம் சொல்லும் செய்தியினை ஆராய்க.

15. (அ) தேம்பாவணியின் வரலாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) சீறாப்புராண அமைப்பு குறித்து ஆராய்க.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களில் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) வஞ்சினமாலையில் இடம்பெறும் கண்ணகியின் செயல்களை விவரி.

(அல்லது)

(ஆ) கண்ணகி வழக்குரைத்த பாங்கினை மதிப்பிடுக.

17. (அ) ஆதிரை பிச்சையிட்ட காதை தரும் செய்திகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) வளையாபதியின் காப்பியப் பண்புகளை நும் பாடப்பகுதியின் வழி எடுத்துரைக்க.



18. (அ) சீவகன் ஒரு சிறந்த காப்பியத்தலைவன் என்பதை எவ்வாறு நிறுவலாம்? மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) ஏமாங்கத நாட்டின் வளம் குறித்து விவரித்து எழுதுக.

19. (அ) இராமனுக்கும் அனுமனுக்கும் இடையே ஏற்பட்ட நட்பின் பண்பு நலன் குறித்து மதிப்பிட்டு எழுதுக.

(அல்லது)

(ஆ) திரு நீலநக்கனாரின் பக்தித் திறம் குறித்து ஆராய்க.

20. (அ) சீறாப்புராணத்தின் காப்பியப் பண்பினை ஆராய்க.

(அல்லது)

(ஆ) தேம்பாவணியில் சேதையோன் வெற்றிப்படலம் குறித்து விவரித்து எழுதுக.

---